**தென் மாகாண சபை-2013**

தென் மாகாண சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது. இதில் உள்ளடங்கியுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்று மாகாண சபையில் முன்வைப்பதற்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தென் மாகாண சபையின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபையின் நிதியம்

மீளாய்வாண்டின் மாகாண சபையின் நிதியக் கணக்கு 2014 ஏப்ரல் 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபை திரண்ட நிதியம் ரூபா (104,099,540) ஆக இருந்ததுடன் அது 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 373,144,340 ஆக இருந்தது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் மாகாண சபை நிதியம் ரூபா 477,243,880 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான 2014 மார்ச் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் தொடர்பான செயன்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 26 | 21 | 05 |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 92 | 55 | 37 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 11 | 01 | 10 |
| (v) | நிதியக் கணக்குகள் | 06 | 03 | 03 |
| (vi) | நியதிச்சட்ட கணக்குகள் | 05 | 02 | 03 |
| (vii) | சொத்துப் பொறுப்புக் கூற்று | 01 | 01 | - |
| | மொத்தம் | 142 | 84 | 58 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக 2014 மார்ச் 27 ஆந் திகதி மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமைக் கூற்றில் மாகாண சபை நிதியத்திலிருந்து உருவான ரூபா 946,693,497 தொகையான சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுகளில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலையான வைப்பு வட்டிக் கணக்கின் மீதி ரூபா 56,502,307 ஆக இருந்ததுடன் இது தொடர்பாக பிரதான பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 3 முற்பணக் கணக்குகளில் திணைக்களப் புத்தகத்தின் பிரகாரமான மீதிகளுக்கும் தென்மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்குமிடையே ரூபா 697,046 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

3 நிறுவனங்களுக்குரிய 01 வருடம் முதல் 03 வருட காலத்தை விஞ்சிய கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 315,870,140 தொகை மற்றும் ரூபா 7,353,052 ஆக இருந்தன.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

3 நிறுவனங்களுக்குரிய ரூபா 218,775,195 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. (விபரம் இணைப்பு இல. 1 இல் காண்பிக்கப்படுகின்றது)

### 2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | | |
| (i) 1.6 ஆம் பிரிவு | 55,877,546 | உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றலாகிச் செல்லும் போது அவர் மாற்றலாகிச் சென்ற திணைக்களத்திற்கு எழுதி அனுப்பி அறவிடவேண்டிய கடன் மீதியை தீர்க்க வேண்டிய போதிலும் 12 நிறுவனங்களிலிருந்து அறவிடவேண்டிய கடன் மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.1, 4:2:3 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | 618,805 | சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெற்றுச்சென்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு 2013 திசெம்பர் 31 ஆம் |

| | | |
|---|---|---|
| | | திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| 1645 (அ-ஆ) மற்றும் 1646 | - | மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 24 வாகனங்கள் மற்றும் மாத்தறை, மொரவக்க, முலட்டியான கல்வி அலுவலகங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் தொடர்ச்சியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்திருக்கவில்லை. |
| (இ) தென் மாகாண சபையின் நிதி விதிக்கோவை | | |
| (i) விதி 30 | 183,683,240 | மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 2013 ஆம் ஆண்டில் 18 செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 183,683,240 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது. |
| (ii) விதி 52 | 901,813 | உணவு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சிற்குரிய 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதி விபத்திற்குள்ளாகிய வாகனத்தின் நட்டமான ரூபா 777,690 தொகை மற்றும் அதிவேக வீதியில் ஏற்பட்ட நட்டத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 124,123 தொகையான நட்டம் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 54 | - | 2013 யூன் 13 ஆந் திகதி பஸ்கொடை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திற்குரிய வான் வாகனத்தின் பின்பக்க கதவு மற்றும் மின்விளக்குகளுக்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்ப விசாரணையேனும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (iv) விதி 113.3 | 460,115 | கிடைக்கின்ற சகல பணங்களுக்காகவும் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | | | போதிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ மாவட்ட வைத்தியசாலை நோயாளிகளிடமிருந்தும், நிறுவனம் மற்றும் நபர்களிடமிருந்தும் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரை சேகரிக்கப்பட்ட பணம் தொடர்பாக பற்றுச்சீட்டு விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) | விதி 117.1 மற்றும் விதி 117.4 | 84,324 | தினந்தோறும் சேகரிக்கப்படுகின்ற காசு தினந்தோறும் அல்லது இயலுமான வரையில் கூடிய விரைவில் வங்கியில் வைப்புச் செய்யவேண்டிய போதிலும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் ஒரு மாதமளவில் கையில் வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) | கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் | | |
| | 2003 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க பாடசாலையொன்றில் ஆசிரியர் தேவையை வழங்கும் நோக்கில் ஆசிரியர் எண்ணிக்கையை தீர்மானிக்கும் சுற்றுநிருபத்தின் 2.1.6 ஆம் பந்தி | | சுற்றுநிருபத்திற்கு முரணாக காலி வலயத்தில் 20 பாடசாலைகளில் பதில் கடமை அதிபர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (ஈ) | தென்மாகாண பிரதம செயலாளரின் சுற்றுநிருபம் | | |
| (i) | 2013 யூன் 27 ஆந் திகிதய 02/2013 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 254,749 | 314-44-3 கணக்கில் செலவின விடய இலக்கம் 1301 இன் கீழ் காசு நிறுத்திவைக்கப்படாமை. |
| (ii) | 2014 யூலை 30 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 7,456,933 | உரிய சுற்றுநிருபத்திற்கு முரணாக காலி மாவட்ட நீர்ப்பாசன அலுவலகம் 2013 சனவரி முதல் திசெம்பர் வரை பாஜ் இயந்திரத்தை வாடகைக்குப் பெற்று 4235 இயந்திர மணித்தியாலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| - மேற்படி - | 480,000 | உரிய சுற்றுநிருபத்திற்கு முரணாக மாவட்ட நீர்ப்பாசன அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக தனியார் வீடொன்றுக்கு வாடகை செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.2.8 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபை ரூபா 109,576,949 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்ததுடன் இதற்காக நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. வருமான முகாமைத்துவம்

2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானம் பின்வருமாறு இருந்தது.

| ஆண்டு | வரி வருமானம் | வரியல்லாத வருமானம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2008 | 2,129,385,380 | 581,339,602 |
| 2009 | 2,105,002,274 | 508,864,837 |
| 2010 | 2,532,157,291 | 520,489,536 |
| 2011 | 3,704,705,988 | 569,924,269 |
| 2012 | 3,287,589,262 | 1,040,988,048 |
| 2013 | 3,218,062,610 | 1,157,466,949 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் 4 வருமான வகைகளில் 01 வருடம் முதல் 21 வருடங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 473,906,734 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்தது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடாது நிலுவையாக இருந்த புரள்வு வரி மீதி ரூபா 70,297,047 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை வருமானம் இன் இழக்கப்படக்கூடிய நிச்சயமற்ற நிலையாக அவதானிக்கப்பட்டது.

(iii) மாகாண சபைக்குரிய 03 பிரதேச செயலகங்களினால் சேகரிக்கப்படுகின்ற உரிய நிலுவை வரியில் ரூபா 11,437,209

கூட்டுத்தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தில் ரூபா 130,858,734 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 477,243,879 ஆகும்.

### 4.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

| ஆண்டு | 2013 | 2012 | நிதி விளைவுகளின் அதிகரிப்பு/(குறைவு) | |
|---|---|---|---|---|
| | (ரூபா.000) | (ரூபா.000) | (ரூபா.000) | % |
| வருமானம் | 4,755,429 | 4,508,779 | 246,650 | 5 |
| செலவினம் | (19,458,243) | (18,030,535) | (1,427,708) | 8 |
| பற்றாக்குறை | (14,702,814) | (13,521,756) | (1,181,058) | 9 |
| அரசாங்க மானியம் | 14,833,673 | 13,044,512 | 1,789,161 | 14 |
| அரசாங்க மானியத்தின் பின்னர் மிகை/(பற்றாக்குறை) | 130,859 | (477,244) | 608,103 | 127 |

### 4.3 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

2011 மே 29 அல்லது அண்மித்த திகதியில் மாகாண சபைக்குச் சொந்தமான கெப் வாகனம் மோட்டார் சைக்கிளில் சென்றவருடன் மோதி விபத்திற்குள்ளாகியிருந்த போதிலும் கெப் வாகனத்தின் சாரதி தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. விபத்திற்குள்ளாகிய மோட்டார் சைக்கிள் உரித்தாளிக்கு ஏற்பட்ட இழப்பிற்காக ரூபா 5,000,000 நட்டஈடு கோரி காலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் M/8663 இன் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாகாண சபை ரூபா 5,000,000 பொறுப்பிற்கு உள்ளாகியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. காப்புறுதியிலிருந்து நட்டஈட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படாதிருந்ததுடன் அதற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. வணிக முற்பணக் கணக்குகள்

10 வணிக முற்பணக் கணக்குகளின் நிதி விளைவுகள் பின்வருமாறு இருந்தது.

| விடய இலக்கம் | முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் | நிதி விளைவுகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | 2013 | | 2012 | |
| | | இலாபம் காலாவதிக் கட்டணம் தவிர | இலாபம் காலாவதிக் கட்டணத்துடன் | இலாபம் காலாவதிக் கட்டணம் தவிர | இலாபம் காலாவதிக் கட்டணத்துடன் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 30602 | நிர்மாணப் பொருள் நிலைமைப் பரிசோதனைக்கூடம் | 18,317,737 | 15,718,512 | 9,469,154 | 6,889,649 |
| 30702 | ஆயுர்வேத மருந்து உற்பத்தி முற்பணக் கணக்கு | 9,471,884 | 1,815,604 | 7,625,882 | 950,341 |
| 31402 | விதை மற்றும் பயிர்ச்செய்கை பொருள் முற்பணக் கணக்கு | 5,667 | - | 21,883 | - |
| 31403 | லபுதுவ பண்ணை முற்பணக் கணக்கு | 6,360,920 | (11,941,953) | 4,581,273 | (13,721,418) |
| 31404 | போத்திவெல பண்ணை முற்பணக் கணக்கு | (655,023) | (6,911,140) | (90,805) | (5,169,689) |
| 31405 | தெலிஜ்ஜவில பண்ணை முற்பணக் கணக்கு | 492,032 | (11,168,888) | 153,068 | 5,318,371 |
| 31602 | கெகணதுற கோழிப் பண்ணை பராமரித்தல் | 1,746,285 | (7,944,086) | 299,758 | (5,418,985) |
| 31603 | விலங்கினக் கட்டுப்பாட்டு பயிற்சி நிலையம் | 172,564 | (655,645) | 505,230 | 53,329 |
| 32148 | வக்வெல்ல முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவகம் | 2,298,195 | (1,932,133) | 943,063 | (1,810,984) |
| 32149 | போகஹபெலஸ்ஸ ஓய்வு விடுதியும் பயிற்சி நிலையமும் | (407,084) | (547,967) | (1,232,857) | (1,598,060) |

(அ) 2013 ஆம் ஆண்டிற்கான 02 முற்பணக் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிக்க முடியாதிருந்ததுடன் முன்னைய ஆண்டு தொடர்பாகவும் 02 கணக்குகளுக்காக அதன் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) லபுதுவ பண்ணையில் முற்பணக் கணக்கிற்குரிய கணக்காய்விற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 21,667,550 தொகையான சொத்துக்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் மூலம் 2013 ஆம் ஆண்டில் பிரதம செயலகம் உட்பட 25 தென்மாகாண செலவின தலைப்புக்களின் நிதி செயலாற்றல் மற்றும் பாதிடப்பட்ட மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினம்/ வருமானங்களுக்கிடையில் முரண்கள் கணிப்பிடப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பிரதம செயலகம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை முறையாகத் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) மாகாண குறித்தொதுக்க அடிப்படையிலான மானியத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் புதிய வேலைகளுக்காக ரூபா 656,963,166 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டில் ரூபா 127,097,087 தொகை அல்லது 19 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 693 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 405 செயற்திட்டங்கள் அல்லது 58 சதவீதமே வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்க தொடர்ச்சியான 590 செயற்திட்டங்களுக்காக ரூபா 728,952,400 நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 273,119,374 தொகை அதாவது 37 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்ததுடன் பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 517 மாத்திரமாகும்.

(ஈ) பிரமாண அடிப்படையிலான மானியத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் புதிய வேலைகளுக்காக ரூபா 187,382,560 தொகை ஒதுக்கப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டில் ரூபா 73,647,921 தொகை அதாவது 39 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்ட 297 செயற்திட்டங்களில் 181 செயற்திட்டங்கள் மாத்திரமே வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(உ) 2012 ஆம் ஆண்டில் பிரமாண அடிப்படையிலான தொடர்ச்சியான 66 செயற்திட்டங்களில் 2013 ஆம் ஆண்டின் போது 54

செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையில் 82 சதவீதத்தை பூர்த்தி செய்வதற்காக ரூபா 45,787,648 தொகையான அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 4,873,070 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) உடுகம வலயத்தில் 16 பாடசாலைகளில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஒரு மாணவராவது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாதிருந்த போதிலும் அந்த ஆண்டுகளில் முறையே ரூபா 71,914 தொகை மற்றும் ரூபா 239,641 தொகை புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றை உயர்த்துவதற்காக செலவிடப்பட்டிருந்தன. வலயத்தில் இரண்டு பாடசாலைகளில் மாத்திரம் உயர்தர உயிரியல் விஞ்ஞானம் மற்றும் கணித பாடப் பிரிவுகள் காணப்பட்டதுடன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒரு மாணவரேனும் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை.

(எ) எல்பிட்டிய வலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 112 மொத்த பாடசாலைகளில் 62 பாடசாலைகளில் எந்தவொரு மாணவரும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாதிருந்ததுடன் அது மொத்தத்தில் 55 சதவீதமாகும்.

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதம செயலாளர் அலுவலகம்

தென் மாகாண பிரதம செயலகத்தில் பிரதி பிரதம செயலாளரின் (மனிதவள மற்றும் பயிற்சி) கீழ் செயற்படுகின்ற அரசாங்க சேவையின் புலனாய்வு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான கோவைகளின் பரீட்சிப்பின் போது 25 ஒழுங்கீன செயற்பாட்டுச் சம்பவங்கள் தொடர்பாக 2013 நவம்பர் 14 ஆந் திகதி வரை பரிசீலனை பூர்த்திசெய்யப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகம்

பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்திற்குச் சொந்தமான அம்பாந்தோட்டை சுற்றுலா விடுதிக்காக மீளாய்வாண்டில் ரூபா 669,634 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த விடுதி 03 சந்தர்ப்பங்களில் 05 நாட்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 360 நாட்களில் எவ்வித செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது சுற்றுலா விடுதிக்காக தனியார் பாதுகாப்பு ஊழியர்களின் சேவை பெறப்பட்டிருந்ததுடன் தங்குபவர்கள் வருகை தராத போது விடுதிப் பொறுப்பாளருக்காக மாதாந்தம் மேலதிக நேரம் 100 மணித்தியாலம் படி வழங்கப்பட்டு 2013 ஆம் ஆண்டில்

மாத்திரம் மேலதிக நேரப்படியாக ரூபா 70,959 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2013 நவம்பர் 30 ஆந் திகதிக்கு முன் இந்த சுற்றுலா விடுதியை மாவட்டச் செயலாளருக்கு முறையாகக் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யாது பொருட்களின் பாதுகாப்பிற்காகத் தங்குமிட பொறுப்பாளருக்கு சம்பளம், பாதுகாப்புச் சேவை செலவினம் மற்றும் நீர், மின்சாரச் செலவினம் என்பவற்றை செய்து மேலும் பராமரிக்கப்பட்டிருந்தது.

(இ) தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

ஹிக்கடுவ அரசாங்க வைத்தியசாலை

(i) வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் காணப்பட்ட Inj.Promethazine Hydrochloride U.S.P 25mg மருந்தினைப் பரிசோதனை செய்தபோது இந்த மருந்தில் 25mg அளவான 38 குப்பி போத்தல்களில் சிறிய கண்ணாடித் துண்டுகள் போன்ற பொருள் பகுதிகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) வைத்தியசாலையின் தலைமை வைத்திய உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ விடுதிக்காக தனிப்பட்ட கோவையொன்று பேணப்படாதிருந்ததுடன் ரூபா 2,254,000 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் உத்தியோகபூர்வ விடுதியின் கூரை மற்றும் மின்சார முறைமை பழுதுபார்க்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 1,710,312 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையும் குடியிருப்பதற்கு தகுதியான நிலையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

பலப்பிட்டி ஆரம்ப வைத்தியசாலை

சத்திரசிகிச்சைக்கூடத்தில் மத்திய குளிரூட்டல் முறைமை 2011 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் இந்த சத்திரசிகிச்சைக்கூடம் 04 சுவர் குளிரூட்டல் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டு பேணப்பட்டிருந்ததுடன் இந்த இயந்திரமும் அவ்வப்போது செயலிழந்திருந்தது. வைத்தியசாலையின் விஷேட சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்களினால் சத்திரசிகிச்சை கூடத்தில் சத்திரசிகிச்சைகளை, சுவர் குளிரூட்டல் இயந்திரம் ஈடுபடுத்தப்பட்டு மேற்கொள்ளும் போது ஏற்படக்கூடிய இழப்பு நிலைமை தொடர்பாக அவ்வப்போது வைத்திய அத்தியட்சகர்களுக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மத்திய குளிரூட்டல் முறைமை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆயுர்வேத ஆணையாளர் திணைக்களத்துக்குரிய பிரதேச அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2012 நவம்பர் 23 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2013 பெப்ரவரி 21 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய கட்டிடம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாமையினால் மருந்து மூலிகை விற்பனை மேம்பாட்டு செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(உ) கெகணதுர ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளி மருந்துக் களஞ்சியத்தில் 11 மருந்து வகைகள் மற்றும் பிரதான மருந்துக் களஞ்சியத்தில் 09 மருந்து வகைகளாக மொத்தம் 20 வகையான மருந்துகள் அளவில் காலாவதியாகியிருந்தது. அவ்வாறு காலாவதியாகிய ஜீரகத்யாரிஷ்ட 2014 மே 13 ஆந் திகதி கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையில் வெளிக்களஞ்சியத்திலிருந்து நோயாளிகளுக்காக விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 03 மருந்து வகைகளில் காலாவதியாகும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தென் மாகாண கல்வித் திணைக்களம்

முலட்டியான வலயம்

(i) 2010 ஆம் ஆண்டு முதல் முலட்டியான வலய அலுவலகத்தின் வேன் வண்டியின் மைலோ மீற்றர் செயற்பாடற்றிருந்ததுடன் அதனை செயற்படுநிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கட்டுப்பாடின்றி எரிபொருள் விநியோகிக்கப்பட்டமையின் காரணமாக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது எரிபொருள் செலவினம் முறையே ரூபா 319,466 மற்றும் ரூபா 386,093 ஆக இருந்தது.

(ii) முலட்டியான வலயக் கல்வி அலுவலகத்திற்கு மீளாய்வாண்டில் 06 மாதங்களுக்கு முன்பிலிருந்து ஏனைய இடங்களிலிருந்து மாற்றலாகி வந்த 28 ஆசிரியர்களின் ஆளணிக் கோவைகளை கொண்டுவராமல் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) கூட்டுறவு ஆணையாளர் திணைக்களம்

(i) 2009 - 2013 காலப்பகுதியின் போது கூட்டுறவு நிதியத்திலிருந்து தென் மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபா 44,050,100 தொகையான கடன்

வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடனிலிருந்து ரூபா 34,765,543 தொகையான கடன் பணமும் அதற்குரிய வட்டி ரூபா 9,434,407 தொகையுமாக ரூபா 44,199,950 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 மார்ச் 08 ஆந் திகதிய 01/2008 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக கிராமிய வங்கி வைப்பு, நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு வைப்புக்களாக கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 84,415,701 தொகை ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(iii) 1972 இல் 5 ஆம் இலக்க கூட்டுறவுச்சங்க அதிகாரச்சட்டத்தின் viii ஆம் பந்தியின் 44 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்த சகல சங்கங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு, கூட்டுறவு பதிவாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரைக் கொண்டு வருடாந்தம் மேற்கொள்ளவேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையில் காலி மாவட்டத்தில் 324 கணக்குகளும், மாத்தறை மாவட்டத்தில் 543 கணக்குகளும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1,619 கணக்குகளும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தென் மாகாணத்தில் காலி மாவடத்தில் 263 கூட்டுறவுச் சங்கங்களும், மாத்தறை மாவட்டத்தில் 35 சங்கங்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 249 சங்கங்களும் பல வருட காலம் தொடக்கம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் அந்த சங்கங்களை செயற்பாடுள்ள சங்கங்களாக மாற்றுவதற்குத் தேவையான எவ்வித நடவடிக்கைகளும் கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க அதிகாரச்சட்டத்தின் 61 ஆவது பிரிவின் கீழ் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரினால் விதிக்கப்பட்ட 1973 நவம்பர் 20 ஆந் திகதி தேசிய அரச சபையினால் அங்கீகரிக்கப்டப்ட 1974 சனவரி 10 ஆந் திகதி 93/5 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்க விதிக் கோவையின் 43(1) ஆம் விதியின் ஏற்பாடுகளிலுள்ள பிரகாரம் கூட்டுறவு நிதியத்திலிருந்து செலவிட முடியுமான நோக்கங்களுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்கு 05 வருடங்களின் போது ரூபா 1,057,308 கூட்டுத்தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது.

(ஏ) சமூக சேவைகள் திணைக்களம்

2013 ஆம் ஆண்டிற்கு பொதுசன நோய்க்கான உதவிகளைச் செலுத்துவதற்காக 6 பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 21,700,000 ஆக இருந்ததுடன் 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதில் ரூபா 7,357,250 சேமிக்கப்பட்டிருந்தது. சமூக சேவைகள் அமைச்சின் 2012 மே 31 ஆந் திகதிய 02/201 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொதுசன உதவி பெறுபவர்களின், உதவி பெறுபவர்களினது பதிவேட்டிலிருந்து அகற்றப்படும் போது பொது மக்களுக்கு அறிவூட்டி அதற்கு ஒப்பீடாக புதிதாக உதவி பெறுபவர்களை சேர்க்க வேண்டிய போதிலும் அது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) யக்கலமுல்ல பிரதேச செயலகம்

யக்கலமுல்ல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 03 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 695,000 தொகையான கெம்செத கடன் பணத்தில் 2013 நவம்பர் மாதம் வரையிலும் ரூபா 135,918 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பலபிட்டிய பிரதேச செயலகம்

பலபிட்டிய பிரதேச அதிகாரப் பிரதேசத்தில் 03 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 950,000 தொகையான கடன் பணத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 280,000 தொகையான மீதி நிலுவையாகக் காணப்பட்டது.

(ஓ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

(i) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கையேற்கப்பட்ட மாத்தறை தொழில் முயற்சியாளர்களுக்கும் சேவை நிலையங்களுக்கும் சொந்தமான ரூபா 6,886,652 தொகையானது மாத்தறை கம்புறுகமுவ உறுஹுணு அபிவிருத்தி வங்கிக் கணக்கில் 7.5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் பாதுகாப்பு முறியாக வைப்புச் செய்திருந்ததுடன் அதனை உபயோகித்து மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களின் வியாபரங்களை முன்னேற்றுவதற்கும் சுயதொழிலை முன்னேற்றுவதற்கும் 12 சதவீத வட்டி வீதத்தின் கீழ் ரூபா 50,000 ஆகக் கூடிய எல்லையின் கீழ் 2003 ஆம் ஆண்டு முதல் கடன் உத்தேசத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. கடன் உத்தேசத் திட்டத்திற்காக உறுஹுணு அபிவிருத்தி வங்கியும் அதிகாரசபையும் மூன்று வருடங்களுக்கொரு முறை புதுப்பிக்கப்பட வேண்டிய

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2003 தொடக்கம் 2014 வரை 415 கடன் பெறுனர்களுக்கு ரூபா 18,383,000 தொகையான கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது. 2008 ஒக்தோபர் 06 ஆந் திகதியின் பின்னர் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 03 வருட இறுதியில் வழங்கப்பட்ட கடன் தொகைகளின் மீதியில் வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களுக்குச் சமமான பணம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட தொகையிலிருந்து அறவிடுவதற்கு உடன்படிக்கை பந்தி இலக்கம் 16.8 இன் கீழ் வங்கிக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் வட்டியுடன் கடன் தவணைப் பணம் உரிய பிரகாரம் அறவிடப்படாமையின் அடிப்படையில் பாதுகாப்பு முறி தொடர்பாக எதிர்கால அபாயம் தோன்றியிருந்தது.

(ii) தென்மாகாண பிரதம அமைச்சு விஷேட நிதியேற்பாட்டின் அடிப்படையில் உறுப்பினர் ஒருவருக்கு 07 செயற்பாடுகளுக்காக ரூபா 1,000,000 படி 38 உறுப்பினர்களுக்காக ரூபா 38,000,000 தொகை தென் மாகாண அபிவித்தி அதிகாரசபை ஊடாக வழங்கப்பட்டிருந்தது. உறுப்பினர்கள் சமர்ப்பித்த பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட பெயர்களில் காசோலை எழுதப்பட்டிருந்ததுடன் உதவிகளை வழங்குவதற்கு தகுதியானவரால் பிரதேச செயலாளரினதோ அல்லது கிராம உத்தியோகத்தரினதோ பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 400,000 படி 38 உறுப்பினர்களுக்காக ரூபா 15,200,000 தொகையில் பிளாஸ்டிக் கதிரைகள் கொள்வனவு செய்வதற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கூறுவிலைகள் கோரப்படாமல் 2014 சனவரி மாதம் ரூபா 14,997,748 பெறுமதியான பிளாஸ்டிக் கதிரைகள், பிலியந்தல நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. உரிய கதிரைகள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமல் நேரடியாக உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்வனவுத் தீர்மானம் எடுத்தலின் எல்லை எவ்வாறானது என கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 2014 சனவரி 12 ஆந் திகதி தென் மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளரின் 2014 சனவரி 16 ஆந் திகதிய PCE/2014/03 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் முரணாக தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையில் 2012/2013 இல் உறுப்பினர் நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 11,392,885 தொகையானது பல்வேறு

செயற்பாடுகளுக்காக 2014 மார்ச் 07 வரை செலவிடப்பட்டிருந்தது.

(ஔ) தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் பல வருடகாலமாக அறவிடப்படாதிருந்த கடை வாடகை வருமானம் ரூபா 3,504,812 ஆகும்.

**6.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

பண்ணைகளில் கால்நடைகள் தொடர்பாக உரிய மேற்பார்வை மேற்கொள்ளப்படாமையினால் 2013 ஆம் ஆண்டில் சனவரி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கெக்குணதுர கால்நடைப் பண்ணையில் வைக்கப்பட்டிருந்த 8495 புரொய்லர் குஞ்சுகளில் ரூபா 827,800 பெறுமதியான 4139 குஞ்சுகள் இறந்திருந்தது.

(ஆ) பிரதம செயலகம் தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 5,614,080 தொகையான கடன் மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 செப்தெம்பர் 04 ஆந் திகதி திறைசேரி நிதியத்தின் மூலம் தென் மாகாண கூட்டுறவு நிதியத்திற்குக் கையளிக்கப்பட்ட கடனிலிருந்து 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் கடன் பணம் ரூபா 31,294,711 தொகையும் அதற்குரிய நிலுவை வட்டி ரூபா 15,339,462 தொகையுமாக ரூபா 46,634,173 தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.4 மாகாண வீதி அபிவிருத்தியும் மேம்படுத்தலும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தோட்டங்களை அண்மித்த வீதி அபிவிருத்திக்காக ரூபா 14 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியத்தின் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு காலி மாவட்டத்தின் 02 வீதிகளும், மாத்தறை மாவட்டத்தில் 07 வீதிகளுமாக 09 வீதிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. உடன்படிக்கையின் பிரகாரம் 2013 திசெம்பர் இறுதியளவில் இந்த வீதிகளின் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 07 வீதிகளின் வேலைகள் 2013 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதம்பை, சுதுவெலிகட, தேவகொடை வீதிகளை கி.மீ.0.000 – கி.மீ 1.70 வரை அபிவிருத்தி செய்யும் வேலைகள் ரூபா 475,735,407 தொகையான மதிப்பீட்டில் பூர்த்திசெய்வதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.1(அ) இன் பிரகாரம் மேற்கூறப்பட்ட வேலை தொடர்பாக கேள்வி பெறப்பட்டிருக்கவில்லை.

## 6.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

மாகாண சபையின் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) தென்மாகாண சபை நிதி விதி 85 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 2013 திசெம்பர் 30 ஆந் திகதி ஆளுநர் செயலகத்திற்காக 60 KVA டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 2,351,866 தொகையான காசோலை எழுதப்பட்டிருந்தது. இந்த மின்பிறப்பாக்கி இயந்திரம் கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் அலுவலகத்திற்கு வழங்கப்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் செலவினமாக கருதி அலுவலக பொருட்பதிவேட்டுப் புத்தகத்தில் பொருள் கிடைக்கப்பெற்றபடி பதியப்பட்டிருந்தது. அவ்வாறே 2013 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையும் இந்த மின்பிறப்பாக்கி இயந்திரம் பௌதீக ரீதியில் காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் BTU-24000 குளிரூட்டி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 03 நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்தின் கூறுவிலை கவனத்தில் கொள்ளாது உரிய துறையில் நிபுணத்துவம் உடைய நபரை உள்ளடக்காத கொள்வனவுக் குழுவினால் உரிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளுக்கிடையில் ஆகக்கூடிய விலை சமர்ப்பித்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையினால் BTU-24000 என்ற 04 குளிரூட்டி இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் போது ரூபா 74,732 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தென் மாகாண கல்வித் திணைக்களத்தினால் 2013 இன் இறுதித் தவணை வினாப்பத்திரங்களை அச்சிடுவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையை விஞ்சி ரூபா 2,347,670 தொகை அச்சிடல் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ஜயசங்க புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்திற்காக வினாப்பத்திரங்களை அச்சிடுவதற்குரிய தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை

கைச்சாத்திடாது ரூபா 1,083,600 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கல்வி அமைச்சின் மூலம் தென் மாகாணத்தின் கல்விப் பெறுபேறுகளின் அபிவிருத்திக்காக பங்களித்த ஆசியர்கள், அதிபர்கள், விடயப் பணிப்பாளர்கள் கோட்ட/ வலயப் பணிப்பாளர், வளப் பங்களிப்பாளர்கள் மற்றும் க.பொ.த.(உ.த) பரீட்சையில் நான்கு பிரிவுகளிலும் மாவட்டத்தில் முதன்மையான 12 மாணவர்களையும் உள்ளடக்கிய 150 பேர்களைக் கொண்ட குழுவொன்று மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கல்விச் சுற்றுலாவிற்காக அனுப்புவதற்கு ரூபா 36,178,328 தொகை கல்வித் திணைக்களத்தின் குணநல உள்ளீட்டு நிதி ஏற்பாடுகளிலிருந்து பெற்று செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 சனவரி 16 ஆந் திகதி முதல் சனவரி 22 ஆந் திகதி வரை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது குழுவாக 75 பேர்களைக்கொண்ட குழு பங்குப்பற்றியிருந்த போதிலும் அந்த சுற்றுலாவிற்கு நாட்டிலிருந்து செல்வதற்காக அங்கீகாரம் வழங்கப்படாதிருந்ததாக சனாதிபதி செயலகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) உரிய வெளிநாட்டு சுற்றுலாவிற்கான இரண்டாவது குழு வெளிநாடு செல்வதை நிறுத்தியிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதிய 790 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 7,875,000 தொகை விமானப் பயணச்சீட்டிற்காக உரிய முகவர் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அந்தப் பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 75 பேர்களையுடைய முதலாவது குழு சுற்றுலாவினை முடித்துக்கொண்டு திரும்ப வந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களின் விடுமுறை தென் மாகாண ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் நோக்கங்களுக்கு முரணாக கூட்டுறவு அமைச்சின் உத்தியோகத்தர்களும் வெளிநபர்களும் தாய்லாந்து, இந்தியா, இஸ்ரரேல் போன்ற நாடுகளில் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக 2000 ஆம் ஆண்டு முதல் 2013 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையான காலத்தில் ரூபா 14,327,083 தொகை கூட்டுறவு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஹுங்கமவில் 55 ஏக்கர் நிலத்தில் மாதிரி

பாரியளவிலான பண்ணையொன்றை ஏற்படுத்தி விலங்கு இனவிருத்தி நிலையத்தை அமைப்பதற்காக செயற்திட்ட அறிக்கை தயாரித்து பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடலும் செயற்பாடும்) அலுவலகத்தின் மூலம் நிதி ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 25,259,640 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(i) அதிகாரசபையிலிருந்து பணம் முற்பணமாகப் பெறப்பட்டு மோசடி செய்தவருக்கு இந்த 55 ஏக்கர் நிலத்தை துப்பரவாக்குவதற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கு ரூபா 4,522,430 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் கொடுப்பனவுகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியாதிருந்தது.

(ii) 2014 யூன் 27 களக் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதி வரையிலும் இந்த நிலத்தில் எவ்வித பயிர்ச் செய்கையுமின்றி தரிசு நிலமாகக் காணப்பட்டது.

(iii) 2011 முதல் 2013 ஆம் ஆண்டு வரை இந்த நிலத்தில் தென்னங் கன்றுகளை பயிரிடுவதற்காக ரூபா 2,183,247 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 27 ஆந் திகதியளவில் சகல கன்றுகளும் இறந்து அழிவடைந்திருந்தது.

(iv) பசுக்களை பராமரிப்பதற்குத் தேவையான நீர் மற்றும் புல் பயிர்செய்கைக்கு கவனம் செலுத்தாமல் மாட்டுப்பட்டிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் இரண்டு மாட்டுப்பட்டிகளும் கைவிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட ரூபா 25,259,640 தொகையான செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(எ) தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் ரூபா 2,000,000 தொகையான முதலீடு தெற்கு போக்குவரத்து பயிற்சி நிறுவகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அந்நிறுவனம் தற்போது மூடப்பட்டிருந்தமையால் அந் முதலீடு தொடர்பாக பிரச்சினைகளுக்குரிய நிலைமை காணப்பட்டது.

(ஏ) உறுஹுணு சுற்றுலா பணியகத்தின் மூலம் தென் மாகாணத்திற்கு வருகை தருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு கடல் தொல்பொருளியல் நிலையத்தின் வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2011 ஆம் ஆண்டின் போது

ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக 2014 யூன் கணக்காய்வுத் திகதி வரையில் ரூபா 6,120,099 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு செயற்பாட்டு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படாதிருந்த போதும் ‘‘கிம்தும்’’ கப்பலுக்காக ஒரு நடத்துனர் சேர்க்கப்பட்டு 2014 சனவரி மாதம் முதல் மே மாதம் வரை ரூபா 125,000 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) 2013 சனவரி 19 ஆந் திகதிய 1793/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஏற்பட்ட துஷ்பிரயோகங்கள் மற்றும் மோசடிகளுக்காக குற்றமிழைத்தவர் என அறிவிக்கப்பட்டு தென் மாகாண கௌரவ பிரதம அமைச்சரினால் காலி நகர பிதாவின் செயற்பாடுகளைக் கைவிடுவதற்கு எதிராக நகர பிதாவினால் தென் மாகாண மேல் நீதிமன்றத்தில் SP/HC/WRIT/03/2013 ஆம் இலக்க வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கின் எதிராளியாக தென் மாகாண கௌரவ பிரதம அமைச்சருடன் 15 முக்கிய எதிராளிகளின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வழக்கின் எதிர்த்தரப்பினருக்காக சட்டத்தரணிக் கட்டணம் மற்றும் விஷேட பரிசீலனைச் சபைக் கட்டணமாக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 5,248,658 தொகை தென் மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 6.6 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சித் திணைக்களத்தால் மாத்தறை மாவட்ட நிர்மாணப் பொருள் பரிசோதனைக்கூடத்தில் சேவையாற்றுவதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும், மாவட்ட பொறியியலாளருக்கும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் நிர்மாணப் பொருள் ஆராய்ச்சிக் கூடங்களுக்கும், பரிசோதனைக் கூடங்களின் தொழில்நுட்பக்கூட உத்தியோகத்தர்களுக்கும், பரிசோதனைக்கூட உதவியாளர்களுக்கும், பரிசோதனைக்கூட ஒத்துழைப்பாளர்களுக்கும், பரிசோதனைக்கூட சாரதிகளுக்கும் மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் விடய எழுது வினைஞருக்கும் 2012 ஆம் ஆண்டில் ஊக்குவிப்புப் படியாக ரூபா 179,583 தொகையும், 2013 ஆம் ஆண்டில் ஊக்குவிப்பப் படியாக ரூபா 200,000 தொகையுமாக ரூபா 379,583 கூட்டுத்தொகை தென் மாகாண ஆளுநரின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு உரித்தற்ற முலட்டியான வலயக் கல்விப் பணிப்பாளர், அலுவலகத்திற்குரிய கெப் வாகனம் மற்றும் வேன் என்பவற்றை 30 நாட்கள் தனிப்பட்ட பாவனைக்காக ஈடுபடுத்தியிருந்தார்.

(இ) அம்பாந்தோட்டை வலயத்தில் பலப்பிட்டி ஆசிரியர் கலாசாலையில் தொழிலாளர் ஒருவர் போலியான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடன் 2008 ஆம் ஆண்டு முதல் 05 வருடங்கள் ஓய்வு பெறவேண்டிய வயதினைவிட அதிகமாக சேவையாற்றி சம்பளமாக ரூபா 920,160 தொகையும், உரிய படிகளும் பெற்றிருந்த போதிலும் 2013 திசெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6.7 நிதியத்தின் குறைவான பயன்பாடு

2013 ஆம் ஆண்டில் அபிவிருத்தித் திட்டத்திற்குரிய மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 14.35 மில்லியன் பெறுமதியான 06 அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக நிதியம் குறைந்த பயன்பாட்டு மட்டத்தில் காணப்பட்டது.

## 6.8 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தை உள்ளடக்கிய வைத்தியசாலைக்கும் இரண்டு வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் உரிய 25 சொத்து வகைகளுக்குரிய 476 உபகரண அலகுகள் 01 முதல் 13 வருடகாலமாக விளைவற்று அல்லது குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டன.

(ஆ) தென் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் ரூபா 291,840 பெறுமதியான 06 நிலையான சொத்து விடயங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 12 நிலையான சொத்து விடயங்கள் மாத்தறை நிர்மாணப் பொருள் பரிசோதனைக் கூடத்தில் விளைவற்றுக் காணப்பட்டமை 2014 மே 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) காலி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 05 எக்ஸ்கெவேட்டர் இயந்திரங்கள் காணப்பட்டதுடன் அதில் 03 இயந்திரங்கள் 2007 முதல் 2013 வரையான ஆண்டுகளில் எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய இரண்டு இயந்திரங்கள் மாத்திரம் மிகவும் குறுகிய காலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரத்தை பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் இயந்திர செயற்படுத்துனர் என்பவைகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,241,743 தொகையான செலவினம்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே ஒரு வருடத்திற்குக் கிட்டிய காலம் தனியார் நிறுவனத்திற்கு பழுதுபார்த்தலுக்காக கையளிக்கப்பட்ட திணைக்களத்தின் கொபொல்கா இயந்திரத்திற்காக பழுதுபார்த்தல் கட்டணமாக ரூபா 815,263 தொகை செய்யப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அது 87 இயந்திர மணித்தியாலங்கள் மாத்திரமே செயற்பட்டிருந்தது.

(ஈ) ஹ/சமனலகம மாதிரி பாடசாலைக்காக 2009 ஆம் ஆண்டின் போது கல்வி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட EKSP/SEMP ஆம் செயற்திட்டத்தின் மூலம் பாடசாலையில் தாபிக்கப்பட்ட கணனி நிலையத்திற்குக் கிடைத்த 09 கணனிகள், 26 அங்குல சிங்கர் தொலைக்காட்சி மற்றும் 02 Multimedia Projector என்பன விளைவற்றுக் காணப்பட்டன.

## 6.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென் மாகாண பிரதம அமைச்சினால் நோக்கங்களுக்கு முரணாக வெசக் வாழ்த்துமடல், காகித உறை, தெற்கு பஞ்சாங்கம் மற்றும் நேர அட்டவணைகளை அச்சிடுவதற்காக ரூபா 6,363,000 தொகை நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாத்தறை மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் O & K எக்ஸ்கெவேட்டர் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக 2007 ஆகஸ்ட் 02 ஆந் திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 191,418 முற்பணமும் செுலுத்தப்பட்டிருந்தது. இதற்கு 5 வருடங்களுக்கு கிட்டிய காலத்தின் பின்னர் 2012 சனவரி 13 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு இந்த இயந்திரம் பழுதுபார்த்தலுக்காக கையளிக்கப்பட்டிருந்ததுடன் இயந்திரத்தை எடுத்துச் செல்வதற்காக ரூபா 30,000 தொகையும் 2012 மார்ச் 02 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது உரிய இயந்திரம் பழுதுபார்க்க முடியாதிருந்தமையினால் அதனை மீள எடுத்துச் செல்லுமாறு அந்நிறுவனம் தெரிவித்திருந்தது. உரிய இயந்திரத்தைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2007 ஆகஸ்ட் 02 ஆந் திகதி முதல் செலவிடப்பட்ட ரூபா 221,418 தொகையும் இதனால் பயனற்ற செலவினமாக இருந்தது.

(இ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 2011 செப்தெம்பர் 04 ஆந் திகதி செய்திப் பத்திரிகையில் அதிகாரசபையின் தலைவர் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில் ரூபா 30 மில்லியன் நட்டஈடு கோரி தொடரப்பட்ட வழக்கிற்காக அதிகாசபையினால் 2013 ஆம் ஆண்டின் போது சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 280,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

இதனிடையே அதிகாரசபையினால் இந்த வழக்கை சமரசத்திற்குக் கொண்டுவருவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக செய்திப்பத்திரிகை நிறுவனத்தினால் மன்னிப்புக் கேட்பதற்கு மேலதிகமாக இதுவரை வழக்கிற்காகச் செலவிடப்பட்ட பணத்தை அதிகாரசபைக்குப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அது தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தென் மகாணத்திற்காக பூகோள சுற்றுலா தகவல் முறைமையைத் தயாரிப்பதற்காக உறுஹுணு சுற்றுலா பணியகம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்துடன் 2013 திசெம்பர் 23 ஆந் திகதி ரூபா 4,490,000 தொகையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதற்காக ஆரம்பக் கட்டத்தின் கொடுப்பனவாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 898,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 யூன் 08 மற்றும் 09 ஆகிய இரு திகதிகளில் கன்னெலியவில் பிரதம அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற அமைச்சுக்களின் செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போது இந்த செயற்திட்டம் மிகவும் சிக்கலானதாகவும், செலவினம் கூடிய செயற்பாடாகவும் உள்ளமையால் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்காக தற்போது செலவிடப்பட்ட ரூபா 898,000 பணம் பயனற்ற செலவினமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 6.10 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1989 முதல் 2013 வரையான கால இடைவெளியில் தென் மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய பாடசாலைகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களில் 111 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட இழப்பு மற்றும் நட்டங்களின் பெறுமதி ரூபா 4,034,996 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக 2014 மார்ச் 10 கணக்காய்வுத் திகதி வரையிலும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக நடவடிக்கை எடுத்து கத்துவ கம்புறுப்பிட்டிய வீதிக்குரிய பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக 1542 மெட்ரிக் தொன் எஸ்போல்ட் தென் மாகாண சபையில் 2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட விலையான ஒரு மெட்ரிக்தொன் எஸ்போல்ட் இன் விலையான ரூபா 11,520 இனை மிகைத்து ரூபா 12,540 படி பெற்றிருந்தமையினால் மாகாண சபை நிதியத்திற்கு ரூபா 1,603,680 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 6.11 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உறுஹுணு சுற்றுலா பணியகத்தினால் அமுல்படுத்தப்பட்ட ரூபா 48,857,900 மதிப்பீட்டுப் பெறுமதியைக் கொண்ட 2 அபிவிருத்தி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய உடன்படிக்கைக் காலத்தை விஞ்சி 03 மாதங்கள் முதல் 1 வருடம் வரையான காலம் தாமதமடைந்திருந்தது.

(ஆ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் தெல்போன குடிநீர் செயற்திட்டம் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 2,765,343 தொகை செலவிடப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(இ) (i) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 850,000 பெறுமதியான 05 செயற்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் எந்த செயற்திட்டமும் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை.

(ii) அதிகாரசபையால் பேணப்பட்டிருந்த செயற்திட்ட செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குரிய மொத்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 119 ஆக இருந்ததுடன் வேலை முடிவடைந்த மற்றும் 50 சதவீதம் வேலை முடிவடைந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 32 ஆகும். 87 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் மேற்கூறப்பட்ட செயற்திட்டங்களில் 27 சதவீதம் பூர்த்தி செய்வதற்காக மொத்த நிதியேற்பாட்டில் 54 சதவீதம் செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 73 சதவீதத்தைப் பூர்த்தி செய்வதற்கு நிதிஏற்பாட்டில் 46 சதவீதம் மாத்திரமே எஞ்சியிருந்தது.

## 6.12 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபைக்குரிய வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு உரித்தில்லாத போதிலும் இசுசு வகையைச் சேர்ந்த ஒரு கெப் வாகனம் 2013 மே 09 ஆந் திகதியிலிருந்தும் அந்த வகைக்குரிய மேலும் ஒரு கெப்வாகனம் 2012 நவம்பர் 23 ஆந் திகதியிலிருந்தும் இரண்டு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத்

திகதியான 2014 ஆகஸ்ட் 22 வரையிலும் கெப் வாகனங்கள் மீள சபை செயலகத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் காலப்பகுதியில் பழுதுபார்த்த நடவடிக்கைகள், பராமரித்தல் சேவைகளுக்காக ஒரு கெப் வண்டிக்காக ரூபா 261,738 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் மற்றைய கெப் வாகனம் தொடர்பான உரிய பராமரிப்பு, சேர்விஸ் செய்தல், சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுப்பாட்டில் இல்லாத நிறுவனங்களுக்காக நான்கு அமைய ஊழியர்கள் முறையான அங்கீகாரமின்றி சேவையில் ஈடுபடுத்தி 2012 சனவரி முதல் 2014 மார்ச் வரையிலான காலப்பகுதிக்காக ரூபா 1,669,704 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 6.13 பதவியணியினர் நிருவாகம்

**6.13.1** கீழே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மாகாண சபையின் 03 நிறுவனங்களின் பதவிகளில் பற்றாக்குறை, மிகை இருந்தமை அவதானிக்கப்பட்டன.

| நிறுவனம் | பற்றாக்குறை | மிகை |
|---|---|---|
| பிரதம அமைச்சு | 27 | 23 |
| விவசாய அமைச்சு | 08 | - |
| உறுஹுணு சுற்றுலா பணியகம் | 31 | 27 |

**6.13.2** (அ) அம்பலாங்கொடை வலயத்தில் 17 ஆசிரியர்களும் இரண்டு காவலாளிகளும் 2005 முதல் 2013 வரை பெற்ற 3916 சம்பளமற்ற விடுமுறை தினங்களுக்காக ரூபா 1,391,016 தொகை அறவிடவேண்டியிருந்தது. மேற்கூறப்பட்ட ஆசிரியர்களுக்கிடையே ஒரு ஆசிரியர் 1995 ஆம் ஆண்டில் ஒரு நாளாவது வேலை செய்யாதிருந்ததுடன் 1996 ஆம் ஆண்டில் 02 நாட்கள் மாத்திரமே வேலை செய்திருந்தார். சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த போதிலும் பதவியுயர்வுகள் வழங்கும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எல்பிட்டிய வலயத்தில் ஆறு ஆசிரியர்களும் இரண்டு கல்வி சாரா பதவியணியினர்களும் 1999 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 773,688 பெறுமதியான 1200 சம்பளமற்ற விடுமுறை தினங்கள் பெற்றிருந்ததுடன் பாடசாலைத் தொழிலாளியின் 386½ நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகளுக்குரிய ரூபா 164,178 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) தென் மாகாண பாடசாலையொன்றில் சேவையாற்ற வேண்டிய உதவி அதிபர் மாகாண கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையில் முறையான அங்கீகாரமின்றி கா/றிச்மண்ட் பாடசாலையில் அலுவலகக் கடமைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டு 2010 யூலை முதல் 2013 செப்தெம்பர் வரை சம்பளமாக ரூபா 997,435 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2011 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் விடுவிக்கப்பட வேண்டிய இந்த உதவி அதிபர் முறையான அனுமதியின்றி பங்குபற்றிய செயலமர்விற்குச் சென்று வரும் போது பாடசாலைக்குரிய வேன் வண்டியின் சாரதியாக செயற்பட்டு விபத்திற்குள்ளாகியமையினால் வேலை நீக்கத்திற்கும் உட்பட்டிருந்தார்.

(ஈ) அம்பாந்தோட்டை வலயத்தில் பலபிட்டி ஆசிரியர் கலாசாலையில் அதிபரை ஓய்வு பெறச் செய்யும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாக இருந்த போதிலும் அம்பலாங்கொடை வலயக் கல்விப் பணிப்பாளரினால் அந்த உத்தியோகத்தர் ஓய்வு பெறச் செய்யப்பட்டிருந்தார்.

(உ) எல்பிட்டி, அம்பலாங்கொடை, உடுகம போன்ற வலயக் கல்வி அலுவலகங்களுக்குரிய ஆசிரியர் சேவையின் 16 உத்தியோகத்தர்கள் ஏனைய வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு 01 வருடம் முதல் 29 வருடங்கள் வரையான காலமாக உரிய வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

**6.13.3** (அ) தென்மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 1358 ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

(ஆ) கீழே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தென் மாகாண சுகாதார சேவைக்குரிய 03 நிறுவனங்களின் பதவிகளில் பற்றாக்குறையும் மிகையும் அவதானிக்கப்பட்டன.

| நிறுவனம் | பற்றாக்குறை | மிகை |
|---|---|---|
| அபறுக்க ஆயுர்வேத வைத்தியசாலை | 26 | 15 |
| வரல்ல ஆயுர்வேத வைத்தியசாலை | 08 | 09 |
| காலி திசாநாயக்க ஆயுர்வேத வைத்தியசாலை | 17 | 10 |

(இ) எல்பிட்டி தள வைத்தியசாலையில் பல் வைத்திய பிரிவிற்கு மூன்று பல் வைத்தியர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் பல் வைத்தியப் பிரிவில் 03 தேவையான உபகரணங்கள் காணப்படாமையின் காரணமாக மனித வளங்களை செயற்திறனானதாக பயன்படுத்திக்

கொள்ள முடியாத நிலைமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**6.14 வாகனப் பயன்பாடு**

(அ) தென் மாகாண சபைக்காக ரூபா 374,150,000 பெறுமதியான 81 டபள்கெப் வாகனங்களும் 19 மோட்டார் கார்களும் உள்ளடக்கிய நூறு வாகனங்கள் வாடகைக் கொள்வனவு அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) திறைசேரி செயலாளரின் 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய BD/GPS/130/09/02 ஆம் இலக்க பாதீட்டுக் சுற்றுநிருபத்தின் 150 ஆம் இலக்கத்தின் பிரகாரம் தென் மாகாண சபை வாடகைக் கொள்வனவின் கீழ் 100 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு, 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய வாகனங்களை கைதவிர்க்கும் நிபந்தனையின் அடிப்படையில் திறைசேரி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கைதவிர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட 141 வாகனங்களில் 112 வாகனங்கள் மாத்திரமே கைதவிர்க்கப்பட்டிருந்தது.

(ii) ஏலமிடப்பட்ட வாகனங்களுக்கிடையில் இரண்டு வாகனங்களை ரூபா 2,476,500 தொகையில் கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர் முன்வந்து பணத்தைச் செலுத்தி உரித்தை மாற்றிக் கொள்வதற்குச் செல்லும் போது வாகனங்களின் செசி இலக்கம் உரிய வாகன உற்பத்திக் கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற முறைக்கு மாற்றமாக இருந்தமையால் ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையின் கீழ் கொள்வனவாளருக்கு அப்பணத்தை மீளச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த வாகனம் தொடர்பாக பிரச்சினை தோன்றுவதற்கு காரணமான விடயங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திறைசேரி செயலாளரின் 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய BD/GPS/130/09/02 ஆம் இலக்க பாதீட்டுக் சுற்றுநிருபத்தின் 150 ஆம் இலக்கத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது வாடகைக் கொள்வனவு முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 100 வாகனங்களில் 2013 நவம்பர் 21 ஆந் திகதி வரையில் 15 வாகனங்கள் விபத்திற்குள்ளாகியிருந்தது. அந்த வாகனங்களுக்காக பூரண மோட்டார் வாகன காப்புறுதி

பெறப்பட்டிருக்கையில் 2013 நவம்பர் 21 வரையில் மேற்கூறப்பட்ட விபத்துக்களுக்கு உட்பட்ட வாகனங்களுக்கிடையில் காப்புறுதி இழப்பீட்டுப் பணம் 03 வாகனங்களுக்காக மாத்திரமே பெறப்பட்டிருந்தது. மேலும் விபத்துக்களுக்கு உள்ளாகிய எந்த வாகனத்திற்காகவும் தென் மாகாண சபை நிதி விதி 54:1:3 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த நபர் கண்டறியப்படாதிருந்ததுடன் 03 வாகனங்களின் விபத்து தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கொள்வனவு செய்யப்பட்ட 100 வாகனங்களில் 7 வாகனங்கள் பிரதம அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கைதவிர்ப்பதற்காக ஒரு வாகனம் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கைதவிர்க்கப்பட வேண்டிய இரண்டு பழைய வாகனங்களை வைத்திருந்தமையால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,126,884 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

(v) பிரதம செயலகத்தின் வாகன கைதவிர்ப்பு சம்பந்தமாக மூன்றாவது வாகன ஏல விற்பனையின் போது 23 வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் எஞ்ஜீன் இலக்கம் என்பன தெளிவில்லாத நிலையினால் மோட்டார் வாகன பரீட்சகரின் சிபார்சின் படி உடைந்ததாக ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தர்கள் இது தொடர்பான பொறுப்பிற்கு உட்படுவதுடன் அதற்காக பரீட்சிக்கப்படாமல் உரிய அதிகார தரப்பினரால் வாகனங்கள் உடைந்ததாக விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையினால் இதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு வாகன ஏலவிற்பனையின் போது பெறப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது மாகாண சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 22,671,968 தொகையளவில் இழக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் கல்வி அமைச்சிற்குச் சொந்தமான 15 வாகனங்களுக்காக 48,737 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 6,039,660 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,615,978 தொகை அமைச்சர் மற்றும் பிரத்தியேக பதவியணியினர் பயன்படுத்திய 06 வாகனங்களுக்காக செலவிடப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டின் போது 22 வாகனங்களுக்காக ரூபா 7,857,188 தொகை எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,038,459 தொகை அமைச்சர் மற்றும் பிரத்தியேக பதவியணியின் 07 வாகனங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும் சனாதிபதி செயலாளரின் 2011 திசெம்பர் 19 ஆந் திகதிய PCMD/1/4/23/4/4 ஆம்

இலக்க சுற்றுநிருபத்திற்கு முரணாக எரிபொருள் படி பெறுகின்ற அமைச்சரின் பிரத்தியோக பதவியணியில் மூன்று உத்தியோகத்தர்களுக்கு 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான எரிபொருள் படியான ரூபா 1,014,420 (8112 லீற்றர்) தொகைக்கு மேலதிகமாக எரிபொருள் கட்டளையின் மூலமும் 10619 லீற்றர் அளவு எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போதும் ரூபா 1,074,169 தொகையான எரிபொருள் படிகளுக்கு மேலதிகமாக எரிபொருள் கட்டளை மூலம் ரூபா 1,168,159 பெறுமதியான எரிபொருள் அந்த வாகனங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 6.15 வங்கிக் கணக்குகளும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களும்

(அ) செயற்பாடற்ற வங்கிக் கணக்கு

தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் பேணப்பட்ட 02 வங்கி நடைமுறைக் கணக்குகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 06 மாதங்கள் தொடக்கம் 6 வருடங்கள் வரையிலான காலம் செயற்பாடற்றிருந்ததுடன் கணக்குகளுக்குரிய வங்கி மீதி ரூபா 90,720 ஆக இருந்தது.

(ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதி

தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் கல்வித் திணைக்களத்திற்குரிய நிறுவனங்களினால் 2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களின் சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|
| | 6 மாதங்களுக்கு மேல் 1 வருடத்திற்குக் குறைவு | 1 வருடத்திற்கு மேல் 3 வருடங்களுக்குக் குறைவு | 3 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தேறாத வைப்புக்கள் | - | - | 3,089,560 | 3,089,560 |
| வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 1,592,804 | 24,000 | 2,680,953 | 4,297,757 |
| இனங்காணப்படாத வரவு | 165,788 | - | - | 165,788 |
| இனங்காணப்படாத செலவு | 74,209 | - | - | 74,209 |
| | 1,832,801 | 24,000 | 5,770,513 | 7,627,314 |

## 07. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திதகிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 05 நிறுவனங்களுக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.2 உள்ளகக் கணக்காய்வு

07 நிறுவகங்களில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம்

2013 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சித் திணைக்களம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அதிகாரசபை போன்ற 3 நிறுவனங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

### 7.4 கொள்வனவுத் திட்டம்

கீழே காட்டப்பட்டுள்ள மாகாண சபையின் 6 நிறுவனங்களால் 2006 மார்ச் 29 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

பிரதம அமைச்சு
ஆயுர்வேதத் திணைக்களம்
கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, …. அமைச்சு
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை
பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகம்

### 7.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

உறுஹுணு சுற்றுலா பணியகத்தில் 2013 ஆம் ஆண்டிற்குரிய பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் இணக்கஞ்செய்த போது உள்ளபடியான வருமானம் மற்றும் பாதிடப்பட்ட வருமானத்திற்கிடையே 43 சதவீத பாதகமான முரண்களைக் காண்பித்ததுடன் பாதிடப்பட்ட மீண்டெழும் செலவினத்தை விஞ்சி உள்ளபடியான செலவினம் 31 சதவீத முரணாக இருந்தது.

| விபரம் | பாதீடு செய்யப்பட்ட | உள்ளபடியான | முரண்கள் | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழும் வருமானம் | 13,569,373 | 7,703,668 | (5,865,705) | (43) |
| மீண்டெழும் செலவினம் | 11,690,112 | 15,342,137 | 3,652,025 | 31 |

**7.6 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் 77 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 162,150,423 ஆகும். (விபரம் இணைப்பு இல.2 இல் காண்பிக்கபடுகின்றது).

**8. முறைமைகளும் கட்டுப்பாடுளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தென் மாகாண சபை நிறுவனங்களின் தலைவர்களுக்கும் பிரதம செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) ஊழியர் நிருவாகம்
(ஈ) செயற்திட்டங்களை அமுலாக்கல்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) வாகனப் பயன்பாடு
(எ) இருப்புக் கட்டுப்பாடு

**இணைப்பு இல- 1**
**பந்தியின் தொடர்பு : 2.2.6**

| **நிறுவனம்** | **கணக்கு விடயம்** | **பெறுமதி** | **வழங்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| இலக்கிய மற்றும் கலை அபிவிருத்தி நிதியம் | பொருள் மற்றும் உபகரணம் வழங்கல் | 2,130,217 | பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டு |
| | நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல் | 1,551,900 | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு, உடன்படிக்கை, திருப்திகரமாக பூர்த்திசெய்யப்பட்டமைக்கான சான்றிதழ் |
| | உதவிக் கொடுப்பனவு | 1,511,319 | பெறுனர்களின் பெயர்ப்பதிவேடு மற்றும் பெறப்பட்டமைக்கான கையொப்பம் |
| | விழாச் செலவினம் | 3,327,890 | பட்டியல், பற்றுச்சீட்டு, செலவின அறிக்கை |
| | அச்சிடல் செலவினம் | 97,560 | பட்டியல், பற்றுச்சீட்டு |
| தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 11,821,432 | சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலை |
| தென் மாகாண உறுஹுணு சுற்றுலா பணியகம் | நிலையான சொத்துக்கள் | 197,313,377 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| | காலி புராதன புத்தக இருப்புக்கள் | 1,021,500 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| | | 218,775,195 | |

**இணைப்பு இல- 2**
**பந்தியின் தொடர்பு 7.6**

பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

| ஐய வினா இலக்கம் | திகதி | விபரம் | பெறுமதி |
|---|---|---|---|
| தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | | | |
| எஸ்என்/ஜீஎல்/பீ/சௌ.சே./பல.றோ.2013/வி. 27 | 2014.01.29 | நிதிக் கணக்காய்வு- பலபிட்டிய தள வைத்தியசாலை- வாகனப் பயன்பாடு | 5,808,372 |
| எஸ்என்/ஜீஎல்/பீ/சௌ.சே./பல.றோ.2013/வி. 32 | -மேற்படி- | மைலோ மீற்றர் செயற்பாடற்றிருந்தமை | - |
| எஸ்என்/ஜீஎல்/பீ/சௌ.சே./பல.றோ.2013/வி. 37 | 2014.02.20 | நிதிக் கணக்காய்வு- பலபிட்டிய தள வைத்தியசாலை- இல. LW-015 என்ற நோயாளர் காவும் வண்டி விபத்திற்குள்ளாகியமை தொடர்பான பரிசோதனை | 1,068,650 |
| எஸ்என்/ஜீஎல்/பீ/சௌ.சே./எல்.றோ.2013/வி. 40 | -மேற்படி- | ஏல்பிட்டிய தள வைத்தியசாலை- மருந்துக் களஞ்சிய பரிசோதனை | 283,781 |
| எஸ்என்/ஜீஎல்/பீ/சௌ.சே./எல்.றோ.2013/வி. 41 | -மேற்படி- | வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல் | - |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2013/சௌ.சே./முவி/07 | 2013.06.21 | வங்கி இணக்கக்கூற்று பரிசோதனை | 16,355 |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2012/சௌ.சே./முவி/04 | 2013.06.14 | பஸ் வண்டியை பகுப்பாய்வுக்கூடமாக நவீனமயப்படுத்தல் | 4,666,432 |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2013/கமு.றோ./முவி/08(ii) | 2013.09.23 | பிரதான களஞ்சியசாலை மற்றும் வைத்தியசாலை வாட்டுக்களின் பரிசோதனை | - |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2013/கமு.றோ./முவி/08(vii) | 2013.09.24 | வைத்தியசாலை பதவியணியினர் தகவல் தொடர்பான பரிசோதனை | - |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2013/வெலி.றோ./முவி/09(v) | 2013.09.30 | வைத்தியசாலை நிலம் தொடர்பான பரிசோதனை | - |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2013/சௌ.சே./14வி.(1) | 2014.01.27 | நிதிக் கணக்காய்வு 2012/2013 மிதிகம மத்திய மருந்தகம் | 353,042 |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2013/சௌ.சே./13வி.(2) | 2014.01.27 | நிதிக் கணக்காய்வு 2012/2013 திக்வெல்ல சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் | - |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2013/சௌ.சே./16வி.(1) | 2014.01.27 | நிதிக் கணக்காய்வு 2012/2013 வெலிகம சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் | - |
| எஸ்என்/எம்ஆர்ஏ/2013/சௌ.சே./11வி.(1) | 2014.01.27 | நிதிக் கணக்காய்வு 2012/2013 அக்குரஸ்ஸ சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் | 163,850 |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி/சௌ.சே./மு.வி. /ப.ச./2013/17/வி.02 | 2014.01.31 | காரியமிடத்த மாவட்ட வைத்தியசலையின் சாரதி உதவியாளர் ஓ.ஏ. தர்மரத்ன அவர்களுக்கு மேலதிக நேரப்படி | 190,784 |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கியமை | |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி/சௌ.சே./மு.வி. /ப.ச./2013/17/வி.01 | 2014.02.11 | அங்கீகாரமின்றி மேலதிக நேரப்படி வழங்கியமை 2012/2013 சுகாதாரத் தொழிலாளர் ரீ.எம். அனுல அவர்கள் | 341,272 |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி/சௌ.சே./மு.வி. /ப.ச./2013/17/வி.03 | 2014.03.05 | மு.வி. 2013/அம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் | 7,016,092 |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி/சௌ.சே./ஆ.கா. /அத்.பீ.கீ/2013/09 | 2014.04.10 | மாகாண அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கு – 2013 விடய இல. 30504 | - |
| எஸ்என்/எச்எம்ஏ/சூ.ரோ/மு.வி. /ப.ச./2013/03- பந்தி இலக்கம் 03(i),(ii),(iii),(iv),(v) மற்றும் பந்தி இலக்கம் 04(i),(ii),(iii),(iv),(v),(vi),(vii) | 2013.09.13 | நிதிக் கணக்காய்வு - 2013 சூரியவெவ மாவட்ட வைத்தியசாலை | 975,544 |
| எஸ்என்/ஜீஎல்/பீ/சௌ.சே./2011/01(vii) | 2011.03.31 | உள்நாட்டு வரித் தொகை உலக வங்கி நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டமை | - |
| எஸ்என்/ஜீஎல்/பீ/சௌ.சே./2011/13(iii) | 2012.01.31 | வாகன விபத்து மற்றும் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை | 210,090 |
| எஸ்என்/ஜீஎல்/பீ/சௌ.சே./2012/02 | 2013.07.18 | விஷேட கணக்காய்வுப் பரிசோதனை நெலுவ கிராமிய வைத்தியசலைக்குச் சொந்தமான இரண்டு மாடிக் கட்டிடத்தை கையளித்தல் | 542,094 |
| எஸ்என்/எச்எம்ஏ/பிராசௌ.சே./மு.வி. /ப.ச./2008/03/02 | 2008.07.14 | இல. 43-0670 என்ற நோயாளர் காவும் வண்டியின் நாளாந்த ஓட்ட அட்டவணை பரிசோதனை அரசாங்க வைத்தியசாலை – மில்தெனிய | - |
| எஸ்என்/எச்எம்ஏ/பிராசௌ.சே./மு.வி. /ப.ச./2008/03/11 | 2008.10.31 | கட்டுநிதி மீதி தீர்க்கப்படாமை | - |
| எஸ்என்/எச்எம்ஏ/பிராசௌ.சே./மு.வி. /ப.ச./2008/03/13 | 2008.10.31 | உத்தியோகபூர்வ வாகனம் தொடர்பான பரிசோதனை | - |
| எஸ்என்/எச்எம்ஏ/பிராசௌ.சே./மு.வி. /ப.ச./2008/03/09 | 2008.10.31 | 56-6704 ஆம் இலக்க வாகன விபத்து தொடர்பான பரிசோதனை | - |
| எஸ்என்/எச்எம்ஏ/பிராசௌ.சே./மு.வி. /ப.ச./2008/03/14 | 2008.11.17 | ஒதுக்கீட்டு சமப்படுத்தல் செலவினப் பேரேடு - 2008 | - |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி./சௌ.சே./மு.வி. /ப.ச./2009/04/02 | 2009.08.24 | புயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தாமை | 328,355 |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி./சௌ.சே./மு.வி. /ப.ச./2009/04/08 | 2009.09.25 | பொருள் மெய்மையாய்வு - 2008 | - |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி./சௌ.சே./மு.வி. /ப.ச./2009/04/10 | 2009.09.25 | சீருடைக்கான துணி வழங்குதல் | - |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி./சௌ.சே./மு.வி. /ப.ச./2009/04/15 | 2009.09.28 | பொது வைப்புக் கணக்கு தொடர்பான பரிசோதனை | 2,200,974 |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி./சௌ.சே./மு.வி. /ப.ச./2009/04/19 | 2010.03.15 | செயற்திட்டக் கணக்காய்வு – உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி | 72,076,805 |

| | | | |
|---|---|---|---|
| | | நிதியம் - 2009 | |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி/சௌ.சே./ அத்.பீ.கீ/2010/06 | | மாகாண அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கு – கணக்காய்வு | |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி/சௌ.சே./ அத்.பீ.கீ/2011/14 | 2012.05.29 | மாகாண அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கு – கணக்காய்வு | |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி/சௌ.சே./ அத/பெத்/2011/02 | 2011.06.20 | பெலிஅத்த மாவட்ட வைத்தியசாலை கணக்காய்வுப் பரிசோதனை | |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி./சௌ.சே./மு.வி. /ப.ச./2012/04/04 | 2012.11.14 | அம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வளவில் நிர்மாணிக்கப்பட்ட கதிர்வீச்சுக்கூடக் கட்டிடம் | 36,000,000 |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி./சௌ.சே./மு.வி. /ப.ச./2009/04/(7) | 2012.11.17 | முறையற்ற வகையில் சம்பளம் செலுத்துதல் | - |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹ.தி./சௌ.சே./ அத்.பீ.கீ/2012/14 | 2013.05.07 | மாகாண அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கு – கணக்காய்வு | - |
| எஸ்என்/எச்எம்ஏ/தங்.மு.றோ./ அத்.பீ.கீ/2010/17 | | மாகாண அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கு – கணக்காய்வு | - |
| எஸ்என்/எச்எம்ஏ/தங்.மு.றோ./ அத்.பீ.கீ/2011/15 | 2012.05.29 | மாகாண அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கு – கணக்காய்வு | - |
| எஸ்என்/எச்எம்ஏ/தங்.மு.றோ./ அத்.பீ.கீ/2012/15 | 2013.05.07 | மாகாண அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கு – கணக்காய்வு | - |
| எஸ்என்/எச்எம்ஏ/அம்.ரோ/மு.வி. /ப.ச./2013/02 | 2013.09.09 | நிதிக் கணக்காய்வு - 2013 சூரியவெவ மாவட்ட வைத்தியசாலை | 25,800 |

**தென் மாகாண கல்வித் திணைக்களம்**

**காலி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| எஸ்என்/ஜீஎல்/டீ/அத்யா.தெ./மு.வி. /ப.ச./2012/26 | 2013.04.30 | தெ.மா. கல்வித் திணைக்களம் | 6,619,880 |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅகா/பாடசாலை/மு.வி./2013/09 | 2013.8.27 | கா/ஸ்ரீ றத்தனசார மகா வித்தியாலயம் | - |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅஅம்/பாடசாலை/மு.வி./2012/25 | 2013.01.16 | கா/பட்டபொல மகா வித்தியாலயம் | - |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅஅம்/பாடசாலை/மு.வி./2012/25 | 2013.08.14 | கா/பீ.த.எஸ். குலரத்ன மகா வித்தியாலயம் | - |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅஉடு/ மு.வி./2012/17 | 2013.01.28 | -மேற்படி- | - |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅஉடு/ மு.வி./2012/21 | 2013.01.31 | -மேற்படி- | - |

**மாத்தறை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அத்யா./2013/11/வி.1 | 2013.12.19 | | - |
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/வலய/அத்யா./மொர/07 | 2013.09.04 | மொரவக்க வலயம் | 13,759,574 |
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அத்யா./2013/16/வி(2) | 2013.12.19 | - | 23,000 |
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அத்யா./2013/16/வி(1) | 2013.12.19 | பிட்டபெத்தர மகா வித்தியாலயம் | 8,200 |
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அத்யா./2013/16/வி(3) | 2013.12.19 | - | - |
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அத்யா/ முல/2013/05 | 2013.07.29 | முலட்டியன வலயம் | 7,640,032 |
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அதுமவி/2013/12/வி(1) | 2013.11.25 | மா/அதுரலிய மகா வித்தியாலயம் | 55,552 |

| | | | |
|---|---|---|---|
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அத்யா./2013/10/வி(1) | 2013.12.09 | மாற/ மொட்டாகெதர பண்டாரநாயக்க மகா வித்தியாலயம் | 107,962 |
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அத்யா./2013/15/வி(1) | 2013.12.27 | பதீகம மகா வித்தியாலயம் | 251,481 |
| எஸ்என்/எம்/ஆர்/ஏ/அத்யா./2013/15/வி(5) | 2013.12.27 | -மேற்படி- | - |
| **அம்பாந்தோட்டை மாவட்டம்** | | | |
| எஸ்என்/எச்எம்/ஏ/ஹகஅ/ற.அ.பி.கி/2012/16 | 2013.09.18 | அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகம் | - |
| எஸ்என்/எச்எம்/ஏ/சமவி/பெத்/2013/04/வி-01 | 2013.11.08 | -மேற்படி- | - |
| எஸ்என்/எச்எம்/ஏ/ஹகஅ/முவி/பச/2013/11/வி.01 | 2013.11.21 | -மேற்படி- | - |
| எஸ்என்/எச்எம்/ஏ/ஹகஅ/முவி/பச/2013/11/வி.02 | 2013.11.27 | -மேற்படி- | - |
| எஸ்என்/எச்எம்/ஏ/ஹகசஅவி/பெத்/2013/05/வி.01 | 2013.12.30 | -மேற்படி- | - |
| எஸ்என்/எச்எம்/ஏ/தங்கஅ/அத்பிகி/2012/17 | 2013.5.14 | தங்காலை வலயக் கல்வி அலுவலகம் | - |
| எஸ்என்/எச்எம்/ஏ/வகஅ/அ.பி.கி/2012/18 | 2013.05.14 | வலஸ்முல்ல வலயக் கல்வி அலுவலகம் | - |
| எஸ்என்/ஜீஎல்/டீ/அத்யா.தெபா./மு.வி./2010/11 | 2011.01.13 | தெ.மா. கல்வித் திணைக்களம் | 397,425 |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅகா/2011/02 | 2012.09.07 | காலி வலயக் கல்வி அலுவலகம் | 1,019,025 |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅகா/2012/05 | 2012.09.07 | -மேற்படி- | - |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅஅம்/2010/12 | 2010.12.10 | அம்பலாங்கொடை வலயக் கல்வி அலுவலகம் | - |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅகா/2010/26 | 2010.12.31 | கோனாபினுவல சாராலங்கார மகா வித்தியாலயம் | - |
| எஸ்என்/ஜீஎல்/டீ/கஅஉடு/பாடசாலை/மு.வி./2012/03 | 2012.12.21 | கா/ஸ்ரீ தர்மாலங்கார மகா வித்தியாலயம் | - |
| **அம்பாந்தோட்டை மாவட்டம்** | | | |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹகஅ/றஅபிகி/2010/16 | 2011.10.31 | ற.நி.அ. அம்பாந்தோட்டை வலயம்-2010 | - |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹகஅ/றஅபிகி/2010/16 | 2012.07.31 | -மேற்படி- | - |
| எஸ்என்/எச்எம்ஏ/தங்கஅ/றஅபிகி/2010/17 | 2011.10.31 | ற.நி.அ. தங்காலை வலயம்-2010 | - |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹகஅ/றஅபிகி/2011/17 | 2012.07.31 | -மேற்படி- 2011 | - |
| எஸ்என்/எச்எம்ஏ/வகஅ/அத்பிகி/2010/18 | 2011.12.13 | ற.நி.அ. வலஸ்முல்ல வலயம்-2010 | - |
| எஸ்என்/எச்எம்ஏ/ஹகஅ/றஅபிகி/2011/18 | 2012.07.31 | -மேற்படி- 2011 | - |
| | | | 162,150,423 |